கிடைக்கும் என்கிற அடிப்படையில், சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் இந்திய பருத்திக் கழகம் அமைக்க வேண்டுமென, தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சிக்கு வருகின்றபோதெல்லாம் நெசவாளர்களுக்கும் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதனால் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. கைத்தறிகள் அதிகமாக உள்ள காலகட்டத்தில், கைத்தறிகளைப் பாதுகாக்க மத்திய அரசால் கதர்க் கட்டுப்பாட்டுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இன்று கைத்தறிகள் பெரும்பாலும் விசைத்தறிகளாக மாறியுள்ளன. அதிக கைத்தறிகள் உள்ள காலகட்டத்தில் கொண்டுவரப்பட்ட இந்தக் கதர்க் கட்டுப்பாட்டுச் சட்டத்தால் விசைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், பருத்திக் கொள்முதல் நிலையம் அங்கே அமைக்கப்படுமா என்று கேள்வி கேட்டுவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அமைக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அமைக்கப்படும் என்று சொல்லிவிட்டார், நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு)*

*வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**16—**

## மருத்துவக் கல்லூரி

***7100—திரு. மு. பன்னீர்செல்வம்:**

*மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மயிலாடுதுறை மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

*2022 ஜனவரி 7]*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்பது மாநில அரசின் கொள்கை முடிவாகும். தமிழக அரசானது மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில், புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் அடிப்படையில், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் நிதிப் பங்களிப்புடன், ஏற்கெனவே 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளான இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில், 2021–2022 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் ஆண்டுகளில், மருத்துவக் கல்லூரி இல்லாத மயிலாடுதுறை மாவட்டம் உட்பட, எஞ்சிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு படிப்படியாக விதிகளின்படி ஆய்வு மேற்கொள்ள, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள்.*

**திரு. மு. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை மாவட்டம், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டம். நாங்கள், மயிலாடுதுறை, கொள்ளிடம், சீர்காழி பகுதிகளிலிருந்து மாவட்ட தலைமை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் கொள்ளிடத்திலிருந்து நாகப்பட்டினத்திற்கு 70 கிலோ மீட்டர்; திருவாரூருக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் அதுவும் கிட்டத்தட்ட 70 கிலோ மீட்டர்; தஞ்சாவூருக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் அதுவும் 100 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. எனவே, மயிலாடுதுறை மாவட்டம், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டம் என்பதால், உடனடியாக மயிலாடுதுறை மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை தந்து அமைத்துக் கொடுப்பார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை, தென்காசி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்கள் எல்லாம் புதிதாக தொடங்கப்பட்டவை அதோடுமட்டுமல்லாமல், காஞ்சிபுரம் உள்ளிட்ட இந்த ஐந்து மாவட்டங்களுக்கு மட்டும்தான் புதிதாக மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட வேண்டி இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து தீவிரமாக பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்தில் படிப்படியாக இந்த மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்க ஆவன செய்யப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள்.*

*முற்பகல் 10–30*

**திரு. மு. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி துவங்குவதற்காக மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிலம் கையகப்படுத்தப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டதா? அப்படி ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொன்னால் எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது என்பதையும் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதைப் பொறுத்தவரை, அதற்கான கட்டுமானம் என்பது அவ்வப்போதிருக்கின்ற விலை மதிப்புகளின் அடிப்படையில் செய்யப்படுகின்ற ஒன்று. எனவே, இப்போது கட்டப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் ரூ.350 கோடி முதல் ரூ.400 கோடி வரையில் செலவாகியிருக்கிறது. நிச்சயம் மயிலாடுதுறையிலும் மாண்புமிகு உறுப்பினர் விரும்புவதைப்போல, நல்ல கட்டமைப்புள்ள ஒரு மருத்துவக் கல்லூரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டித் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2022 ஜனவரி 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

## சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***3612—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, குளித்தலை சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் ஐந்து முறை முதலமைச்சராகப் பதவி வகித்து முத்திரை பதித்த முன்னாள் முதலமைச்சர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வெற்றி பெறச் செய்து, முதன்முதலாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பி வைத்த குளித்தலை தொகுதிக்கு சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவது குறித்து வினா அமைந்தது எனக்கு உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கிறது. தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கரூர் பதிவு மாவட்டத்தில் உள்ள குளித்தலை சார் பதிவாளர் அலுவலகம் கடந்த 1865 ஆம் ஆண்டு முதல் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்த காரணத்தால், சார் பதிவாளர் அலுவலகம் அங்கிருந்து மாற்றப்பட்டு, 16–4–2018 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலன் காக்கும் அரசால் குளித்தலை சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் இந்த ஆண்டில் கட்டப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.